# பிராந்திய ஆவணப்படுத்தல் - மட்டக்களப்பு

## நூலக நிறுவனம் அறிமுகம்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்டச் சுருக்கம்

மட்டக்களப்பு பிராந்திய ஆவணகத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வரலாறு, அங்கு வாழும் மக்களின் பாரம்பரியங்கள், பழக்கவழக்கங்கள், கலை கலாசாரக் கூறுகள், சமூகக் கட்டமைப்புக்கள், விவசாயம் மற்றும் இதர வாழ்வாதார முறைகள், பன்மைத்துவம், சமூக நிறுவனங்கள், பாடசாலைகள், வழிபாட்டுத் தளங்கள், பெண்கள் அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள், அந்த மாவட்டத்திலே இடம்பெற்ற பொருளாதார மாற்றங்கள், அபிவிருத்தி முயற்சிகள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு முறைகள் போன்றன பற்றியும் பண்டைய வரலாற்றினையும், அந்தப் பிரதேசத்தின் அரசியற் தனித்தன்மைகளையும், மன்னார் இலங்கையின் வேறு இராசதானிகளுடன் கொண்டிருந்த உறவுகளையும் ஆவணப்படுத்துவதே இச்செயற்றிட்டமாகும்.

## அறிமுகமும் பின்புலமும்

மட்டக்களப்பு இலங்கையின் கிழக்குக் கரையோரம் அமைந்துள்ள முக்கிய நகரங்களுள் ஒன்று. இது நாட்டின் ஒன்பது மாகாணங்களுள் ஒன்றான கிழக்கு மாகாணத்திலுள்ள மிகப் பெரிய நகரமும், மட்டக்களப்பு நிர்வாக மாவட்டத்தின் தலைநகரமும் ஆகும். தமிழ் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் பெருமளவில் முஸ்லிம் மக்களும் வாழ்கின்றனர். மட்டக்களப்பானது "மீன் பாடும் தேன் நாடு" என அழைக்கப்படுகின்றது. இதன் எல்லைகளாகத் திருகோணமலை, பொலன்னறுவை, அம்பாறை ஆகிய மாவட்டங்கள் அமைகின்றன. கொழும்பிலிருந்து இது 301 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது

இலங்கையின் கிழக்கு கடற்கரையில் இந்து சமுத்திரத்தினை கடல் எல்லையாகக் கொண்டமைந்த கிழக்கு மாகாணத்தின் மத்தியில் அமைந்துள்ள பரந்த நிலப்பரப்பாகும். இது சராசரியாகக் கடல் மட்டத்திலிருந்து 5 மீட்டர் உயரமுடையாகும். மட்டக்களப்பு நகரின் தனித்துவமான சிறப்பியல்பு யாதெனில் இது மூன்று கடல்நீரேரிகளைக் கொண்டுள்ளதே. அவையாவன மட்டக்களப்பு வாவி, வாழைச்சேனை வாவி, பனிச்சங்கேணி வாவி (அல்லது வாகரை வாவி). இதில் மட்டக்களப்பு வாவியே மிக நீண்டது. இது 56 km நீளமும், 168 சதுர கிலோமீற்றர் பரப்பும் கொண்டது. வடக்கில் ஏறாவூர் வரையும் தெற்கில் கல்முனை வரையும் நீண்டுள்ளது. இது சிறு நிலப்பரப்புக்களையும் தீவுகளையும் கொண்டமைந்த அழகிய கடல்நீரேரி ஆகும்.

கடநீரேரிக்கு குறுக்காகச் சிறு நிலப்பரப்புகளையும் தீவுகளையும் இணைக்கும் வண்ணம் பாலங்கள் அமைக்கப்பட்டிருப்பது நகருக்கு மேலும் அழகு சேர்க்கிறது. மட்டக்களப்பு நகரின் நகராட்சி மையமான புளியந்தீவு இவற்றுள் மிகப்பெரிய தீவாகும். கோட்டைமுனை நிலப்பரப்பை கல்லடி என்ற இடத்துடன் இணைக்கும் கல்லடிப்பாலமானது சிறப்பு வாய்ந்ததொன்றாகும்.

மட்டக்களப்பானது இயற்கை எழில் நிறைந்த கடற்கரைகளைக் கொண்டுள்ளது. பாசிக்குடா மற்றும் கல்குடா கடற்கரைகள் மிகவும் பிரபல்யமானவை. பாசிக்குடா கடற்கரையின் ஒரு பகுதி, அலைகள் குறைவான, மட்டமான நீரினை உடையதும் முருகைக்கற்கள் நிறைந்ததும் நீந்துபவர்களுக்கு மிகவும் இதமானதுமாகும். கல்லடியிலுள்ள கடற்கரையும் மிகக்கூடியளவான மக்களைக் கவரும் அழகிய அமைப்புடையதாகும்.

இற்றைக்கு 2500 வருடங்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் மக்கள் இங்கு வாழ்ந்தார்கள் என்பதற்கு பல்வேறு புராண மற்றும் தொல்லியல் சான்றுகள் உள்ளன. இந்துக்களின் மிகவும் புராதனமான நூலாகிய இரமாயணமும்கூட, இங்கு அமைந்துள்ள மாமாங்கேஸ்வரர் ஆலயமும் அதன் தீர்த்தக்கேணியும் அனுமனால் உருவாக்கப்பட்டது எனக்கூறுகிறது

மட்டக்களப்பு மாவட்டம் வாவியால் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றில் ஒருபகுதி எழுவான்கரை (சூரியன் எழும் பகுதி அ-து கிழக்குப்பகுதி) என்றும் மறு பகுதி படுவான்கரை (சூரியன் மறையும் பகுதி அ-து மேற்குப்பகுதி) என்றும் அழைக்கப்படுகின்றது. காடுகள், விவசாய நிலம், வாவி, முகத்துவாரம்,கடல், அணைகள், களப்பு, இயற்கைத் துறைமுகம், குளம் போன்ற புவியியல் அம்சங்களைக் கொண்டுள்ளது. படுவான்கரைப் பிரதேசம் வளமிக்க விவசாய நிலத்தினைக் கொண்ட பகுதியாகும். மட்டக்களப்பு பிரதான நகரினைச் சூழ்ந்து வாவி காணப்படுவது இயற்கை வனப்பான விடயமாகும்.

## செயற்றிட்டத்துக்கான நியாயப்பாடு

நூலகம் நிறுவனம் தமிழ் பேசும் சமூகங்களின் வரலாற்றினையும், வாழ்க்கை முறைகளினையும், அவர்களின் வாழ்வுடன் பிணைந்த சமூக, கலாசார, பொருளாதார,

அரசியல் விடயங்களையும் ஆவணப்படுத்தி வருகிறது. தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாவட்டமாக விளங்கும் மட்டக்களப்பு மாவட்டத்தினை ஆவணப்படுத்துவது இந்த வகையில் முக்கியத்துவம் மிக்கது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் முக்கிய பொருளாதார நடவடிக்கையாக விவசாயம் காணப்படுகின்றது. தெங்கு உற்பத்திக்குரிய சிறப்பான வளங்களை இம்மாவட்டம் கொண்டிருந்த போதும் 1978 ம் ஆண்டின் கொடும் சூறாவளியின் பின்னர் தெங்குப் பயிர்ச்செய்கை வினைத்திறனாக மேற்கொள்ளப்படாததால் அவை சார்ந்த தொழில்துறை நலிவடைந்துள்ளது. 2003 ஆம் ஆண்டில் 1664 ஏக்கர் தென்னை உற்பத்தி இலக்கு வைக்கப்பட்டது. இதே ஆண்டில் பனை உற்பத்திப் பொருட்கள்மூலம் ரூபாய் 1,266,000.00 வருமானமாகப் பெறப்பட்டது. சிறுபோக, பெரும்போக பயிர்ச்செய்கை விவசாயத்தில் முக்கிய இடம்பெறுகின்றது. கொச்சி மற்றும் சின்ன வெங்காய பயிர்ச்செய்கையும் முக்கிய விளைச்சல் பயிர்களாகும்.

கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு இங்கு பொருளாதாரத்தில் முக்கிய இடம்பெறுகின்றன. கடல் மற்றும் பிற நீர்வளங்கள் இங்கு உள்ளதால் மீன்பிடி முக்கிய தொழிலாகவுள்ளது. இறால், நண்டு என்பன முக்கிய வருவாய் ஈட்டித் தருவனவாகவுள்ளன. மட்டக்களப்பு நகர் மற்றும் அதனைக் கிட்டிய இடங்களில் கைத்தொழில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.
அரச மற்றும் தனியார் வங்கிகள் நகரத்தில் காணப்பட்டு, பொருளாதாரத்தில் முக்கிய பங்களிப்புச் செய்கின்றன. மட்டக்களப்பு நகரில் 5479 பேர் அரச சேவையிலும், 572 பேர் அரச சார சேவையிலும், 1202 தனியார் சேவையிலும் உள்ளனர். உல்லாசப் பயணிகளின் கவனம் இங்கு இருப்பதால் 25 விடுதிகள் காணப்படுகின்றன

பரந்துபட்ட கிழக்கு மாகாணத்தின் முதன்மைப் பல்கலைக்கழகமான கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை இம் மாவட்டத்தின் வந்தாறுமூலை எனும் ஊரில் அமைந்துள்ளது. இது மட்டக்களப்பு நகரிலிருந்து வடக்காக 17 கி.மீ தொலைவில் மட்டக்களப்பு-திருகோணமலை ஏ-15 நெடுஞ்சாலையில் உள்ளது. மட்டக்களப்பு கல்வி வலயங்கள் மண்முனை வடக்கு, மண்முனைப் பற்று, மண்முனை மேற்கு, ஏறாவூர்ப் பற்றென நான்காகப் பிரிக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் 233 பாடசாலைகளில் இந்நான்கு கல்வி வலயங்களில் 106 பாடசாலைகள் காணப்படுகின்றன.மட்டக்களப்பு நகருக்குட்பட்ட மண்முனை வடக்கு கல்வி வலய 41 பாடசாலைகளில் ஏழு "1AB" தரத் தேசியப் பாடசாலைகள் காணப்படுகின்றன. அவ் தேசியப் பாடசாலைகள் கிறித்தவ நற்செய்தி அறிவிப்பாளர்களினால் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட புனித மிக்கேல் கல்லூரி தேசியப் பாடசாலை, மெதடிஸ்த மத்திய கல்லூரி, சிசிலியா பெண்கள் பாடசாலை, வின்சன்ட் பெண்கள் பாடசாலை போன்றனவும், சுவாமி விபுலானந்தரால் ஆரம்பிக்கப்பட்ட மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம் மற்றும் மட்டக்களப்பு விவேகானந்தா பெண்கள் மகா வித்தியாலயம், மட்டக்களப்பு இந்துக் கல்லூரி என்பனவாகும் 2008ம் ஆண்டு புள்ளிவிபரத்தின்படி, இவ்வேழு தேசிய பாடசாலைகளிலும் 11,895 மாணவர்கள் கல்வி கற்றனர். இதுதவிர சில முஸ்லிம் வித்தியாலங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்விச் செயற்பாட்டில் முக்கிய இடம் வகிக்கின்றன.

இவ்வாறான விடயங்களின் மீது தனது கவனத்தினைக் குவிக்கும் இந்தச் செயற்றிட்டம், மட்டக்களப்பு மாவட்டத்தினதும், அங்கு வாழும் மக்களினதும் வரலாற்றினை அவற்றின் எல்லாச் சிக்கற் தன்மைகளுக்கு ஊடாகவும் வெளிப்படுத்த முயற்சிக்கும்.

## இலக்குகளும் நோக்கங்களும்

- இலங்கையில் தமிழ் பேசும் சமூகங்களின் வரலாற்றின் உருவாக்கத்திலே மட்டக்களப்பு மாவட்டமும், அங்கு வாழும் மக்களும் கொண்டிருக்கும் வகிபங்கினை வெளிக்கொண்டு வருதல்.

- மட்டக்களப்பு மாவட்டத்தினதும் அங்கு வாழும் மக்களினதும் வரலாற்றினை ஆவணப்படுத்தும் இந்த முயற்சியானது, அதனுடைய கால மற்றும் இட ரீதியிலான தன்மைகளின் அடிப்படையில் பரந்துபட்டது. இந்த முயற்சியினை ஒரு செயற்றிட்டத்தின் மூலமாக நிறைவுசெய்ய முடியாது. இந்த முதலாவது செயற்றிட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தினைச் சேர்ந்த கிராமங்களையும், அங்கு வாழ்ந்த மற்றும் தற்போது வாழுகின்ற மக்களினை ஆவணப்படுத்துவதனை பிரதான நோக்காகக் கொண்டுள்ளது.

- மட்டக்களப்பு மாவட்டத்துக்குரிய தனித்துவமான சமூகக் கட்டமைப்புக்கள், பண்பாட்டு அம்சங்கள், கலை வடிவங்கள், சடங்குகள், மரபுகள், இலக்கியங்களை வெளிக்கொண்டு வருதல்.

- மட்டக்களப்பு மாவட்டத்தினுள் அவதானிக்கப்படும் பன்மைத்துவம், அசமத்துவங்கள், அதிகார மையங்கள், மக்களின் எதிர்ப்பு முயற்சிகள் பற்றி ஆவணங்கள் வாயிலாக வெளிப்படுத்தல். அத்துடன் மன்னார் பற்றிய ஆய்வுகளிலே ஈடுபடுவோருக்கு ஊக்குவிப்பினை வழங்குதலும், அவர்கள் தமக்கு வேண்டிய பிரதான ஆதாரங்களை இலகுவில் பெறக்கூடிய ஒரு அமைப்பினை இணையவெளியில் உருவாக்குதல்.

## எதிர்பாக்கப்படும் செலவீனம்
**LKR 4,657,574**

மேலதிக விபரங்களுக்கு
**https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132**